Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்; 04 விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 22 (07 - 08 - 1991) புதன்கிழமை ஓசை: 170

கப்பலில் வினாத்தாள் கொண்டு வர முயற்சி

(யாழ்ப்பாணம்)

நடைபெறாது போன கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எந்நேரத்திலும் மீண்டும் நடைபெறும் வகையில் கப்பல் மூலம் வினாத்தாள்கள் கொண்டுவருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரியவருகிறது. இந்த பரீட்சை வினாத்தாள்கள் எப்பொழுது வருகிறதோ அன்றைய தினத்திலிருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

முல்லையில் முப்பது நிமிட அதிரடித்தாக்குதல்

8 இராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

மூன்று காவலரண்கள் அழிப்பு

இரு போராளிகள் வீரமரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. எட்டுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன இரு புலிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்றுக் காலை 9-20 மணியளவில் முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் மீது புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். சுமார் அரைமணி நேரம்வரை இம் மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் எட்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் காயமடைந்தனர். இம் மூன்று காவலரண்களும் புலிகளால் அழிக்கப்பட்டன.

பல நவீன ஆயுதங்கள் முல்லைத்தீவில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ காவல் அரண் மீதான தாக்குதலின்போது பல நவீன ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன அவற்றின் விபரம் வருமாறு:

★ ஏ.கே. எல். எம். ஜி ரக துப்பாக்கி - 2, இதற்குரிய மகசீன் - 6, லிங் - 550

★ ஆர். பி. ஜி. - 1, ஷெல் -3 புரப்ளர் - 3

★ ரி 56 - 2 ரக துப்பாக்கி - 3 இதற்குரிய மகசீன் - 4

★ ரி 81 ரக துப்பாக்கி - 3 இதற்குரிய மகசீன் - 8

★ நடுத்தர ரவைகள் - 964

★ தொலைத் தொடர்பு சாதனம் - 01

★ குண்டு துளைக்காத கவச அங்கிகள் - 4

கஜபாகு தொண்டர் பிரிவு தீவிர சேவைக்கு அழைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் கஜபாகு அணியின் ஏழாவது தொண்டர் படையை தீவிர சேவைக்கு அழைக்கும் பிரகடனம் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகியபோது சபாநாயகர் எம். எச். மொகமட் பிரேமதாசாவின் இந்தத் தீர்மானத்தை தெரிவித்தார்.

நாட்டில் குழப்பங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் குழப்பங்களை அடக்குவதற்கும். ஏதுவாக இந்தப் பிரக்டனம் வெளியிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

கொட்டடியில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(ஈச்சமோட்டை)

ஆனையிறவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று பிற்பகல் 2மணியளவில்கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டன.

அலன் (கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன், மட்டுநகர்), சுரேஸ் (சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன், கொட்டடி) ஆகிய

(4ஆம் பக்கம் பார்க்க)

இல. தமிழர் மனோநிலை பெருமளவு பாதிப்பு

(சென்னை)

தமிழகத்தில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் இதுவரை பொருளாதார ரீதியான கஷ்டங்களை மட்டுமே எதிர் நோக்கியிருந்ததாகவும், ஆனால் தற்போது தமிழக மக்களின் வெறுப்பையும், சந்தேகப் பார்வையையும்பெற்று மனோநிலை ரீதியாகப் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியிருப்பதாகவும் ஏ.எப்.பி. செய்தியாளர் கூறியுள்ளார்.

இலங்கைத்தமிழ்அகதிகளை தமிழகத்தில் தஞ்சம் புக அனுமதித்துவிட்டு, தற்போது அவர்களை விரட்ட நினைப்பது சரியல்ல என்றும், அவர்கள் நாடு திரும்பமுன் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் முன்னாள் எம். எல். ஏயான டி. ஆர். ஜனார்த்தனம் கூறியுள்ளார்.

வீரவணக்கம்

2-வதுலெப்.பானு
2-வதுலெப். கீரன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நேற்று சிறிலங்கா இராணுவ முகாம் காவல் அரண் மீதான தாக்குதலின்போது 2-வது லெப். பானு (திருச்செல்வம் செந்தில்குமார், முல்லைத்தீவு) 2-வது லெப். கீரன் (சின்னத்தம்பி ரமேஸ்குமார் குமுழமுனை) ஆகிய இருபோராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

சாரணருக்கு அழைப்பு

(நமது நிருபர்)

அவசரகால சாரண சேவையில் ஈடுபட்டிருந்த வடமாகாணத்தைச் சேர்ந்த சகல சாரணர்களும், சாரணத்தலைவர்களும், குருளைச் சாரணர் தலைவர்களும், சகல சாரண முக்கியஸ்தர்களும் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

கப்பலில் நோயாளர் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்

விசேட சிகிச்சைக்காக கொழும்பு சென்று சிகிச்சை பெற்றவர்களில் ஒரு தொகுதியினர் பருத்தித்துறைக்கு இன்று வந்து சேருமென எதிர் பார்க்கப்படும் குமண என்ற கப்பலில் வந்து சேருவார்கள் என்று யாழ் போதனா வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஆனையிறவில் பல இராணுவம் பலி

(இயக்கச்சி)

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்றுக்காலை புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

நேற்றுக்காலை கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேற முற்பட்டபோதே இந்த மோதல் மூண்டது. சிலமணித்தியாலங்கள்நீடித்த இம்மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இறந்த இராணுவத்தினரின் சடலங்களைக்கூட மீட்க முடியாத நிலையில் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றதினால் சில இராணுவத்தினரின் சடலங்கள் கைவிடப்பட்ட நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் நலனுக்காக

எவரின் கோபத்தையும் ஏற்கத் தயாராய் உள்ளேன்

- பிரேமதாசா

(கொழும்பு)

நாட்டின் நலனுக்காக பத்தாயிரம் பேரின் கோபத்துக்கும் ஆளாக நான் தயார் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்களை கவனிக்கும் அதிகாரிகள் கவனமாக செயற்பட வேண்டும் எனவும், நாட்டின் நலனுக்காக பத்தாயிரம் பேரின் கோபத்துக்கும் ஆளாக நான் தயார் என்று பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

எனக்குக் கீழ் பணிபுரிவோரின் திறமைகளை பாராட்டவும், குறைகள் தவறுகளை பகிரங்கமாக சுட்டிக் காட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

முல்லை. மாவட்டத்தில் மருத்துவசேவை ஸ்தம்பிதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச மநத்துவ சேவைகள் பெருமளவில் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முற்றாக இயங்காமல் உள்ளது. மேலும் மாவட்டம் முழுவதற்கும் ஒரேயொரு எம்.பி பி.எஸ் வைத்திய அதிகாரியே பணியாற்றி வருகின்றார் ஏனைய அரச மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் ஆர்.எம்.பி வைத்திய அதிகாரிகளே சேவையாற்றுகின்றனர்

இந்திய வரவு செலவு திட்டம்; இரண்டாம்தடவை திருத்தம்

(டில்லி)

இந்தியாவில் நரசிம்மராவ் தலைமையிலான அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டப்பிரேரணை இரண்டாவது முறையாகத் திருத்தப் பட்டுள்ளது.

விவசாயிகளுக்காக வழங்கப்படும் உரத்துக்கான மானியம் வரவு செலவுத் திட்டத்தில் நாற்பது சத விகிதம் குறைக்கப்பட்டிருந்தது. இதனால் உரங்களின் விலை அதிகரிக்கும் என்றும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறி இடதுசாரிக் கட்சிகளும் பாரதீயஜனதாவும் கண்டனம் செய்திருந்தன. அவசியம் ஏற்பட்டால் அரசைத் தோற்க

(4ஆம் பக்கம் பார்க்க)

தீவக மக்களிடம் மண் மீட்பு நிதி பெற ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

தீவகம் மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து 10 - 08 - 91 சனிக்கிழமை மு.ப 10 00 மணிக்கு மீட்பு நிதி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மீட்புநிதி செலுத்த விரும்புவோர் அன்றைய தினம் கோண்டாவிலில்அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி கோரியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம்

விதை நெல்/பாவனைக்குரிய நெல்
ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான

கேள்விப் பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் தனது கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்தில் (இராமநாதன் விவசாயப்பண்ணை) உற்பத்தி செய்த பின்வருவனவற்றை விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரங்களை அழைக்கின்றது.

1. விதைநெல் - இனம் - BG - 350
   - BW 351

2. பாவனைக்குரிய நெல் - மேற்படி இனங்கள் விதை நெல் விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்போர் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும்,

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றுக்கு செலுத்த விரும்பும் விலை.
4. விதைநெல் / பாவனைக்குரிய நெல் என்பதை குறிப்பிடவும்.

விற்பனை விலை, விற்பனை செய்யக் கூடிய அளவு ஆகியவை பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ். பல்கலைக் கழக கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும் / நிராகரிக்கும் உரிமை யாழ். பல்கலைக்கழகத்துக்கு உரியது.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

கேள்விப்பத்திரங்கள் 1991 - 08 - 17ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

நிதியாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''நெல் விற்பனைக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும், கேள்விப்பத்திரங்கள் 1991 - 08 - 17ஆம் திகதி பி. ப. 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

(B-2919) — **பதிவாளர்**

31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
18-11-1972

வீரமரணம்
07-07-1991

வீரவேங்கை பரணி
(நாகரட்ணம் இன்பதாசன் (தாசன்)

பூத்தது றோஜா ஒன்று
புகுந்தது போர்க்களம் அன்று
பரணி எனும் நாமம் கொண்டு
தரணியினை காவல் கொண்டு
தமிழீழம் மீட்டிடவே தினம்
தயங்காது போரிட்டான்
மரணம் என்ற பிசாசு வந்து
ம றி எடுத்ததே உன் மூச்சை
தன்னியங்கி துப்பாக்கி அன்று
தவறுதலாய் இயங்கியதால்
மார்பினிலே குண்டுபட்டு
மடிந்தாயே மண்ணுக்காய்!

முள்ளியவளை.

- **குடும்பத்தினர்,**
நண்பர்கள்,

(B-2913)

வரிவிளம்பரம்

அனித்தா
பயிற்சி நிலையம்
மனையியல் கண்காட்சி

இம்மாதம் 9,10.11 ஆம் திகதிகளில் நடைபெறும். Cakeicing, Cookery, Hair Style, Handi Craft, Needle Work.

(B/2900)

மலிவு விற்பனை

A/L, O/L, ஆண்டு 5 புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond புத்தக நிலையம் 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/2891)

திரவ சவர்க்காரம்

மில்க்வைற் புதிய திரவ சவர்க்காரம் சகல அழுக்கு அகற்றி. சலவைக்குச் சிறந்தது. அரைப் போத்தல் ரூபா. 45/- லேபலுடன் வெற்றுப் போத்தல் தந்தால் ரூபா 2/- கழிவு. - ''மில்க்வைற்''

(B/2901)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
01	08
-	-
02	08
-	-
1966	1990

திருமதி P. பத்மவதனி

கண்ணை இமை காப்பது போல் இம்
மண்ணில் எம்மைக் காத்திருந்த தாயே!
விண்ணை நீர் சென்றடைந்து
ஆண்டொன்று போனாலும்
எண்ணமதில் உம் நினைவை என்றும்
கொண்டிருப்போம் என்பதனால்
ஆண்டவனின் சந்நிதியில் அமைதியை
பெற்றிடுக என்றே வணங்குகின்றோம்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

சகோதரர், பிள்ளைகள்,

(R-1619)

நினைவு கூருகின்றோம்...

1991 - 08 - 07

கர்ணன்

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - மன்னார் வீதி, நெளுக்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்காப் படையினரின் முகாம் அருகில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு அளம்பிலில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

வேந்தன் (சண்முகம் பவானந்தராசா - நிலாவெளி, திருக்கோணமலை)

தீசன் (வேலுப்பிள்ளை மகேஸ்வரன் - தம்பசிட்டி)

கர்ணன் (சிவப்பிரகாசம் சிவகுமார் - சரசாலை, சாவகச்சேரி)

ஜேம்ஸ் (சிவசுப்பிரமணியம் மணிவண்ணன் – பருத்தித்துறை)

புன்னாலைக் கட்டுவனில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

புத்தூரில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

மாக்கிரட் (கருப்பையா கிருஷ்ணகுமார் - பூதன்வயல், முள்ளியவளை)

திருக்கோயில் - சங்கமான்கண்டி பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 47 தமிழர்கள்.

வவுனியா/கல்மடு சர்வோதய சிறுவர் பாடசாலை அகதிமுகாம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

சமளன்குளத்தில் முஸ்லிம் குழுவினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

செட்டிகுளம் 10 ஆம் யுனிற் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

யாழ். அத்தியடி அம்பலவாணர் வீதியில் இருந்த எமது முகாம் மீதான விமானக்குண்டு வீச்சில் உயிரிழந்த எமது ஆதரவாளர்களான செ. செல்வக்குமார், கா. சிவபாலன்

இதே இடத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும், மானிப்பாய் மருத்துவமனை, திருநெல்வேலி பொதுச்சந்தை ஆகியவற்றின் மீதும் சிறிலங்கா விமானப் படைகள் நாள் முழுவதும் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சினால் உயிரிழந்த ஒரு மாணவன் உட்பட 9 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- **விடுதலைப் புலிகள்**
மக்கள் முன்னணி

(B-2914)

சிந்தனைக்கு

செயல் மறக்கப் படலாம்: ஆனால் அதன் விளைவு தொடர்கிறது. — ஒவிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 07-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

சோளம் பொரியால் பிடித்த கதையல்ல

ஆனையிறவு இராணுவமுகாமை கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய இராணுவத்தினர் சென்றடைந்ததை வெகுவாகப் பாராட்டியுள்ள பேரினவாதப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளுக்கு ஆலோசனை வழங்கவும் முன்வந்துள்ளன இதன் அடிப்படையில் தி ஐலண்ட் பத்திரிகை கெரில்லாப் போராட்டத்தில் வெற்றிபெற முடியாது என்பதனைப் புலிகள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுரை வழங்கியுள்ளது.

ஆனையிறவு மோதல் ஆரம்பித்தபோது ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடப்போகின்றது. இராணுவமும் அரசாங்கமும் கவனயீனமாக இருந்துவிட்டன. ஏனையோர் ஆலோசனையைப் பெறத்தவறி விட்டன எனப் பலவாறு கூக்குரலிட்டுப் புலம்பிய பேரினவாதப் பத்திரிகைகள் இராணுவம் 'மூக்கித்தக்கி' ஆனையிறவு முகாமை மூன்று வாரப் போரின் பின் அடைந்த பின்னர் மீண்டும் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கி விட்டன.

விடுதலைப் புலிகளை இப்பொழுதும் ஒரு கெரிலாப் படை அணியாகவே கருதி முகாம் தகர்ப்பு நடவடிக்கையினால் அவர்கள் வெற்றிபெற முடியாது என தி ஐலண்ட் பத்திரிகை கருதுமானால், கொண்டச்சி முகாமில் இருந்து யாழ் கோட்டை. மாங்குளம் இராணுவ முகாம் வரை புலிகள் தாக்கி அழித்த இராணுவ முகாம்களுக்கு நிகழ்ந்ததை எவ்வாறு அப்பத்திரிகை கருதுகின்றது?

அதேவேளை ஆனையிறவு முகாமை மிக இலகுவில் சிறிலங்கா இராணுவத்தினரால் மீட்டுவிட முடியவில்லை. பெரும் உயிர், பொருள் இழப்புக்களின் மத்தியிலேயே இராணுவ முகாம் மீட்கப்பட்டது. வெற்றிலைக்கேணி - கட்டைக் காட்டுப்பகுதியில் தரையிறங்கிய இராணுவத்தினருக்காக இரண்டு வாரங்களுக்குள் 250 தொன் வெடிப்பொருட்கள் தரையிறக்கப்பட்டதில் இருந்தே போரின் கடுமை தெரிந்திருக்கும்; புலிகளின் எதிர்த்தாக்குதலின் திறன் வெளிப்பட்டிருக்கும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளை தற்பொழுதும் ஒரு கெரில்லாப்படை அணி என்ற வரைவிலக்கணத்திற்குள் தள்ளி சிங்கள மக்களை ஒரு மாயைக்குள் தள்ள பேரினவாதப் பத்திரிகைகள் முயல்கின்றன.

ஆனால் ஆனையிறவுப் போரில் ஈடுபட்டவர்களும் ஆனையிறவுப் போரின் முழுப் பரிமாணங்களும் விளங்கிக் கொண்டவர்களும் பத்திரிகைகளின் இவ் அபிப்பிராயங்களைக்கண்டு கவலைதான் கொள்வார்கள். ஏனெனில் இவர்களின் அறிவிப்புக்கள் சில போர்முனையின் கடுமை பற்றி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன

ஆனையிறவுப் போரின் தகவல்களை நேரடியாகப் பெற்றுவந்த சிறிலங்கா இராணுவத்தினரின் தளபதி ஹமில்டன் வணசிங்கா நீண்ட காலத்திற்கு புலிகளை கெரில்லாப்படை அணி எனச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அவர்கள் அதிகமாக மரபுப் படையினர்போல தொழிற்படுகின்றனர் என்றார். ஆனால் போரினை நேரடியாக நெறிப்படுத்திய இவருடைய கருத்துக்களை மறைக்கும் அளவிற்கு பேரினவாதக்கொள்கை அப்பத்திரிகைகளின் செயற்பாடுகளாக உள்ளன. அதாவது உண்மைகளை ஜீரணிக்கக்கூட அப்பத்திரிகைகள் தயாராக இல்லை.

ஆனால் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவம் ஆனையிறவு முகாம் சென்றமை பி. பி. ஸி. அரசியல் ஆய்வாளர் குறிப்பிட்டதுபோன்று சோளம் பொரியால் யானையைப் பிடித்தது போன்ற கதை அல்ல. பெரும் தொகை உயிர்களையும், பொருளையும் இழந்தே இந்த ஆனையிறவு முகாமைத் தக்கவைக்க சிறிலங்கா இராணுவத்தால் முடிந்தது அதுவும் இன்னும் முழுமை பெற்றுவிட்ட விடயம் என்று கூறுவதற்கில்லை,

இந்நிலையில் இழப்புக்களைக் கருதாது வெற்றியைக் கொண்டாட முனையும் பேரினவாதப் பத்திரிகைகளால் சிங்கள மக்களுக்கோ, ஆட்சியாளர்களுக்கோ நன்மை எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. கடந்த காலத்திலும் இப்பத்திரிகைகளின் பேரினவாதச் சிந்தனைகளே இலங்கையில் இன்று இவ்வாறான நிலை உருவாகியதற்கு முக்கிய காரணமாகும்.

சிறிலங்காவிற்கு இராணுவ, அரசியல் ரீதியில்

பலத்த அடி கொடுக்கவே

ஆனையிறவுப் போர்

- மனோ

(வவுனியா)

ஆனையிறவு யுத்தக் களத்தில் நிற்கும் போராளிகளின் மனங்களில் வித்தியாசமானதொரு எழுச்சி உள்ளது. சிறிலங்கா அரச படையினருக்கு இராணுவ அரசியல் ரீதியில் பலத்த அடி கொடுப்பதற்கும் அரசின் இராணுவ மேலாதிக்க நிலைமையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் எமது போராளிகள் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ எமது ஈழநாதம் நிருபரிடம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவருடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது: சிங்கள அரச படையினருக்கெதிராக ஆனையிறவு முகாம் பகுதியில் இடம்பெற்று வரும் மாபெரும் யுத்தத்தில் நாம் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை களத்தில் நின்று போராடும் எமது போராளிகளிடம் உள்ளது. சிறு சிறு காயங்கள் ஏற்பட்ட போராளிகள் யாவரும் திரும்பச் சென்று சிங்களப் படைக்கெதிராகப் போரிடுவதை அறிய முடிகிறது. இந்த முற்றுகைப் போரில் வெற்றி பெற வேண்டும் ஏன்கிற வேகம் எமது போராளிகளிடம் நிறையவே உள்ளது.

இன்று களத்தில் நிற்கும் வேங்கைகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வீரத்தை எண்ணி வியந்து போயுள்ளனர் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வளவு பெரிய வீரர்களாக வருவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. வீரமரணமடையும் அத்தனை போராளிகளையும் தமது பிள்ளைகளாகவே பெற்றோர்கள் எண்ணுவதை இங்கு அவதானிக்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனையிறவுப் பகுதியில் கடுமையான வெப்பக்காற்று வீசுகிறது. அனல் வெயில் எறிக்கிறது. இப்பகுதியில் நின்றுதான் எமது போராளிகள் போரிடுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், இப்போரில் களப்பலியாகும் போராளிகளினதும், காயமடையும் போராளிகளினதும் வெற்றிடத்தை ஈடுசெய்வதற்கு குடும்ப அங்கத்தவர் ஒருவரை இணையுமாறுகேட்டுக்கொண்டார்.

வன்னிப்பகுதி மக்களின் தற்போதைய பிரச்சினைகள் பற்றிக் கேட்டபோது, தற்போது உணவுப்பொருள், மருந்துப் பொருள் பற்றாக்குறை இங்கு ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்களில் உள்ள மக்கள் இப்பற்றாக்குறை காரணமாக கஷ்டநிலை அடைந்துள்ளனர்.

விமானப் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் வழமை போல் தொடர்ந்து இடம் பெறுகின்றன. யுத்தப் பகுதிகளில் பயிர் செய்யப்பட்ட வேளாண்மை கூட விமானத் தாக்குதலினால் பாதிப்படைந்து வருகின்றது என்று தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் சமீப நாட்களாக பாடசாலைகள் செயல்படாமல் மூடிக் கிடக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் முற்றாக செயல்படவில்லை என்று குறிப்பிட்ட அவர் சமூக சேவை ஸ்தாபனங்கள், மக்கள் முன்னணியின் உப அமைப்புகள், மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களும் இப்போரில் பாதிப்படையும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் (தி)

வைத்தியசாலைகள் ஒருங்கிணைப்பு

(வேலணை)

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பெண்கள் விடுதியில் இயங்கி வந்த ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை தற்பொழுது வேலணை அரசினர் வைத்தியசாலையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு இரு வைத்தியசாலைகளும் ஒன்றாக இயங்கி வருகின்றன.

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் திரு. ந. கனகசபை இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

(14)

எறிகணைத் தாக்குதல்

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படை முகாமில் இருந்து புங்குடுதீவுமீது எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டு வருகின்றது. இம்மாதம் முதலாம்திகதிவியாழக்கிழமை முதல் இத்தாக்குதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது. அன்றைய தினம் மாலை குறிகட்டுவான் பகுதியை நோக்கி இரண்டு எறிகணைகள் ஏவப்பட்டன. இவை அப்பகுதியிலுள்ளவளவுகளில் வீழ்ந்து வெடித்தன. தொடர்ந்து தினமும் இரண்டு அல்லது மூன்று எறிகணைகள் இவ்வாறு ஏவப்பட்டு வருகின்றன. குறிகட்டுவான் பகுதியில் இருந்துபெரும்பாலானமக்கள் இடம் பெயர்ந்திருப்பதனால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. (22)

கொழும்பில் தெற்காசிய விளையாட்டு

(கொழும்பு)

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி இந்த வருடம் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

போர்க்காலச் சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனங்கள்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாம் போர்க்காலச்சேவையில் பளைக்குச் சென்றுசேவையாற்றியஸ்தாபனங்களின் விபரப்பட்டியல்களைவிடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு

சங்கானை வட்டவைப்பகுதி

இளை.முன். கழகம், சித்தங்கேணி, மூளாய், சிற்றூரவை, சங்கானை மேற்கு சிற்றூரவை, அராலி மேற்கு சிற்றூரவை, சங்கானை கிழக்கு சிற்றூரவை, சங்கரத்தை ச.ச. நிலையம், வட்டு. தெற்கு சிற்றூரவை, வட்டு. இளைஞர் அபிவிருத்திக்கழகம், சங்கானை தெற்கு சிற்றூரவை, சுழிபுரம் கிழக்கு சிற்றூரவை, தொல்புரம் சிற்றூரவை, அராலி கிழக்கு சிற்றூரவை, அண்ணா விளை, கழகம், அராலி, இந்து வாலிபர் சங்கம், மூளாய் ஐக்கிய இளை. சங்கம், அராலி தெற்கு சிற்றூரவை.

உடுவில் வட்டவைப் பகுதி

உடுவில் வட்டவை, உடுவில் தெற்கு சிற்றூரவை, சிவசக்தி ச. ச. நிலையம், ஞானவைரவர் ச.ச.நிலையம், ஜனசக்தி ச. ச. நிலையம், சுன்னாகம் வட. ச, ச. நிலையம் சுன்னாகம் மத்தி சிற்றூரவை, நேரடித் தொடர்பு துன்னாலை.

சாவகச்சேரி வட்டவைப் பகுதி

சாவகச்சேரி வட்டவை, கைதடி - நுணாவில் சிற்றூரவை, மட்டுவில் - நுணாவில் சிற்றூரவை, மட்டுவில் கிழக்கு சிற்றூரவை, கோவிலாக்கண்டி சிற்றூரவை, நாவற்குழி தச்சன் தோப்பு, தனங்கிளப்பு. மறவன்புலோ, மீசாலை மேற்கு சிற்றூரவை, சாவகச்சேரி வடக்கு, மீசாலை கிழக்கு, மிருசுவில் படித்த மகளிர்குடி. திட்டம், கச்சாய் - கொடிகாமம் சிற்றூரவை.

சண்டிலிப்பாய் வட்டவைப் பகுதி

சில்லாலை வடக்கு சிற்றூரவை, நவாலி கிழக்கு சிற்றூரவை, நவாலி வடக்கு சிற்றூரவை, நவாலி தெற்கு சிற்றூரவை, சுதுமலை சிற்றூரவை. மாசியப்பிட்டி சூரியோதய ச. ச. நிலையம்.

பச்சிலைப்பள்ளி வட்டவைப் பகுதி.

பளை ப. நோ. கூ. ச ஊழியா, தெ.ப.பொ.கூ. ச. ஊழியா, வட்டவையூடாக.

(தொடரும்)

இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி தென்பகுதியில் (ஜே/75) பகுதியிலும் கோட்டை (ஜே/81) பகுதியிலும் கடமையாற்றிய எஸ். ராமலிங்கம், எஸ். தில்லைநடராஜா ஆகிய இரு கிராம சேவையாளர்களும் இந்த மாதம் 1ஆம் திகதியிலிருந்து வண்ணார்பண்ணை வட கிழக்குப் பகுதிக்கும் (ஜே/101) சுளிபுரம் மத்திக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிம்பாவேயில் 86 மாணவர்கள் மரணம்

சிம்பாவேயில் பஸ் விபத்தொன்றில் 86 பள்ளிக்கூட மாணவர்கள் உயிரிழந்தனர். கடந்த சனிக்கிழமை இரவு மலைப்பாதையில் 99 மாணவர்களுடன் வந்த பஸ் தடம் புரண்டதால் இந்த விபத்து ஏற்பட்டது. படுகாயமடைந்த 13 மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டுப் போட்டி ஒன்றில் பங்குபற்றிவிட்டு மாணவர்கள் வீடுதிரும்பும் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஆலடி அருணா மீது வழக்குத் தொடர முடிவு

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச் சாட்டிற்கு எதிராக அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா மீது தமிழக அரசு 'கிரிமினல் அவதூறு வழக்கு' தொடர முடிவு செய்துள்ளது என அறிவித்துள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் தி.மு.க வின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா வெளியிட்ட அறிக்கையொன்றில் ''அ.தி.மு.க அரசு பொறுப்பேற்ற பின்னர் தி.மு.க. தலைவர்களின் தொலைபேசி பேச்சுக்களை கண்காணித்து தகவல்கள் கொடுக்குமாறு காவல் துறைக்கு ஆணையிட்டிருப்பதாக'' குறிப்பிட்டிருந்தார்.

ஆலடி அருணாவின் இந்தக் குற்றச் சாட்டு ஆதாரமற்றது என்றும், அவதூறு செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு மட்டுமே தமிழக அரசு மீது இந்தக் குற்றச் சாட்டை தி.மு.க சுமத்தியுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஆகவே ஆலடி அருணா மீது வழக்குத் தொடர இருப்பதாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

புலிகளுடன் தொடர்பென தமிழகத்தில் இருவர் கைது

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு உள்ளவர்களெனக்கருதப்படும் இரண்டு பேரைத் திருச்சியில் கைது செய்ததாகத் தமிழகக் காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

திருச்சிமாவட்டத்தில்மூன்று இடங்களில் இருந்து ஒரு துப்பாக்கி, மூன்று 'வோக்கி டோக்கி' சாதனங்கள் ஆகியவையும்ஏராளமானமோட்டர்களும்,கைக்குண்டுகள் தயாரிப்பதற்கான உதிரிப் பாகங்களும் மற்றும்பல்வேறுசாதனங்களும் கைப்பற்றப்பட்டன என்று காவல்துறைஅதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முருங்கப்பேட்டைக் கிராமத்தைச் சேர்ந்த ஹோமியோபதி மருத்துவர் என்றும், மற்றொருவர் அருகிலுள்ள அனலை கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கிடமான ஒலியலைப் பதிவு

(மதுரை)

மதுரைக்கு சமீபமாகவுள்ள கடலில் சந்தேகத்துக்குரிய ஒலியலைகளைப் பதிவு செய்திருப்பதாக இந்தியக் கடற்படையினர் கூறியுள்ளனர் இதன் மூலம் மதுரைக்கு அருகே புலிகள் தகவல் பரிமாறிக்கொள்ளும் வானொலி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும், இது உண்மை என்றால் அதனைத் தாம் விரைவில் கண்டு பிடிப்போம் என்றும் இந்தியக் கடற்படை கூறியுள்ளது

ராஜீவ் அறக்கட்டளைக்கு 30 லட்சம் ரூபா

(சென்னை)

தமிழக இந்திரா காங்கிரஸ் நிர்வாகக் குழு ராஜீவ்காந்தி அறக்கட்டளைக்கு மேலும் முப்பது லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது

இதற்கான காசோலையை அறக்கட்டளைத் தலைவர் திருமதி சோனியாகாந்தியிடம் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வழப்பாடி ராமமூர்த்தி வழங்கியுள்ளார்.

கொட்டடி

மாவீரர்களின் புகழுடல்களுக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின்னர் இங்கு நிகழ்ந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியைச் சேர்ந்த தனபால், குகதாஸ் மாஸ்ரர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

பி.ப3.15 மணியளவில் இம் மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக ஆஸ்பத்திரி வீதி வழியாக பாண்ட் இசையுடன் எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின. (43)

கப்பலில்

நேரசூசியில் அன்று எந்தப் பாடம் நடைபெறுமோ அத்தப்பாடம் நடாத்தப்படும் என்றும் கல்வித்திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதனால் மாணவர்கள் தொடர்ந்தும் தமது பரீட்சைகளுக்கு தயாரான நிலையிலேயே இருக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (லோ)

காவிரி நீர்ப் பிரச்சினை; நீதிமன்றம் அழைப்பாணை

(டில்லி)

காவிரி ஆற்று நீர் பகிர்வு தொடர்பான நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவுக்கு எதிராகக் கர்நாடக அரசு தாக்கல்செய்த மனு தொடர்பாகத் தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி மற்றும் மத்திய அரசுக்கும் உச்ச நீதிமன்று நேற்று அழைப்பாணை அனுப்பியுள்ளது

நடுவர் மன்றம் 205 ரி மெ. சி. நீரை தமிழ்நாட்டுக்கு விடுவிக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிடிருந்தது தெரிந்ததே. செப்டெம்பர் 10 ஆம் திகதி அடுத்த விசாரணை இடம்பெறவுள்ளது.

குர்திஷ் கெரிலாக்கள் மீது

ஈராக்கினுள் புகுந்து துருக்கி தாக்குதல்

(அங்காரா)

ஈராக் எல்லைக்குள் சுமார் பத்துமைல் தூரம்வரைதுருக்கி இராணுவம் ஊடுருவித் தாக்குதல் நடத்தியுள்ளதாக துருக்கிப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியை அரசு ஊர்ஜிதம் செய்து உள்ளது. தரைவழியாகவும், வான் வழியாகவும் ஊடுருவி ஈராக் பிரதேசத்தில் வாழும் குர்திஷ் கெரில்லாக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக துருக்கி அரசு அறிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; சென்ற வார இறுதியில் ஒன்பது துருக்கிய வீரர்கள் கொல்லப்பட்ட தாக்குதலை நடத்திய குர்திஷ் கெரில்லாக்களை தேடியே துருக்கிய இராணுவத்தினர் வட ஈராக்கினுள் சென்றதாகவும், தேவை முடிந்தபின்னர் திரும்பி விட்டதாகவும் துருக்கி அரசு கூறியுள்ளது.

மொறிசியஸ் பாராளுமன்றம் கலைப்பு

மொறிசியஸ் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதியன்று நடைபெறும். அந்நாட்டின் பிரதம மந்திரி இதை அறிவித்தார்.

எவரின்

வும் நான் தயங்கமாட்டேன். திறமையில்லாதவர்களை நான் விமர்சிக்கும்போது அவர்கள் கோபம் கொள்வதில் அர்த்தமேயில்லை என்றும்,

நாட்டின் நலன் கருதியே நான் செயல்படுகிறேன் என்று பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம்7-8-91(இன்று) புதன் கிழமை காலை 11-30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யூக்கோவில். சமாதானம்

ஐரோப்பிய குடும்பம் தொடர்ந்தும் முயற்சி

(பெல்கிரட்)

யூகோஸ்லாவியாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தளர்த்துவதற்கு ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் தொடர்ந்து முயற்சி எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது. இவர்கள் நெதர்லாந்தில் ஒரு மாநாட்டை நடத்தியுள்ளனர். செர்மியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை கொண்டு வருதல்; குரோசியா, ஸ்லவேனியா போன்றவற்றை சுதந்திர குடியரசுகளாக அங்ககரித்தல்; ஐரோப்பிய அமைதி காப்பு படையை அனுப்பி வைத்தல்; ஆகியன உட்பட பல்வேறு மாற்று வழிகள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

பாரதீய ஜனதாக்கட்சி தேசவிரோதமானது

-- மாதவராவ் சிந்தியா

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சி தேச விரோதமானது என்று சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா லக்னோவில் கூறியது பற்றி பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் லோக்சபாவில் கடுமையான ஆட்சேபம் தெரிவித்தனர்.

ஜனநாயக அரசியலில்குறை கூறுவதற்கு ஒரு வரம்பு உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும் அவரது கட்சியாளரும் தெரிவித்ததோடு அந்த அமைச்சர் நிபந்தனையற்ற மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் கோரினர்.

பாதுகாப்பு கருதியே இடமாற்றம்

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் முக்கியமான பதிவேடுகள் மற்றும் தஸ்தாவேஜுகள் அங்குள்ள நிலைமைகாரணமாக பாதுகாப்புக் கருதி யாழ்/ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைக்கப்பட்டுள்ளன. நிலைமை சீரடைந்ததும் மீண்டும் இவற்றை திரும்பவும் சாவகச்சேரிக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்பு நிலைமை சீரடைந்ததும் வழமையான அலுவல்கள் நடைபெறும் என மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மத்திய கிழக்கில்

பேச்சுவார்த்தை மூலம் அமைதியை ஏற்படுத்தலாம்

-ஜேம்ஸ் பேக்கர்

(அல்ஜியர்ஸ்)

பேச்சுவார்த்தை மூலம் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை தனக்கு இன்னமும் இருப்பதாக மத்திய கிழக்கிற்கான விஜயத்தை முடித்துகொண்ட அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேக்கர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

அல்ஜீரிய ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரியுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடாத்திய ஜேம்ஸ்பேக்கர், மத்தியகிழக்கு சமாதானமாநாட்டில் லிபியா ஒருபார்வையாளராகக் கலந்துகொள்வதை வரவேற்பதாக தெரிவித்தார்.

அராபியர்களும், இஸ்ரேலியரும் பேச்சுவார்த்தை மூலம் தமக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வர் என்று எதிர்பார்ப்பதாகவும், சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

இதனிடையில் ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையில் இஸ்ரேல் புதிதாக யூதக்குடியேற்றங்களை அமைத்திருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பத்து குடும்பங்கள் நேற்று முன்தினம் அங்கு சென்று குடியேறியிருப்பதாக இஸ்ரேலிய அதிகாரிகள் கூறி உள்ளனர் இது எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள சமாதான மாநாட்டிற்குக் குந்தகம் ஏற்படுத்தும் எனத் தெரிய வருகிறது.

இந்தக் குடியேற்றம் திடீரென எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல என்றும், எட்டு வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவு இது என்றும் இஸ்ரேலியப் பாதுகாப்புஅமைச்சர் மோதே ஆரன் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் ஒற்றுக்கேட்க அமைச்சு பணிக்கவில்லை

- சவான்

(டில்லி)

பாராளுமன்ற உறுப்பினர் எவரினதும் தொலைபேசிப் பேச்சுக்களை ஒற்றுக்கேட்குமாறு கோரும் பணிப்புரையைத் தனது அமைச்சு வெளியிடவில்லை என்று உள்துறை அமைச்சர் எஸ். வி, சவான் நேற்று ராஜ்ய சபாவில் கூறியிருக்கிறார்.

எந்த ஒரு மாநிலத்திலாவது அவ்விதம் தொலைபேசிப் பேச்சுக்கள் ஒற்றுக்கேட்கப்படுகின்றனவா என்று தான் தகவல் தொடர்பு அமைச்சரிடம் கண்டறியப் போவதாகவும், இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்,

வெங்கட்ராமன் பயணங்கள் ரத்து

(டில்லி)

இந்திய ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன்நாட்டின்பொருளாதாரநிலைமையைக்கருதி செப்டம்பரில் தான் மேற்கொள்ள இருக்கும் துருக்கி, இத்தாலி, சிலி ஆகிய நாடுகளுக்கான தன் பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

அதேவேளை ஹைதராபாத்தில் ராஷ்டிரபதி நிலையத்தில் ஆண்டு தோறும் சென்று திரும்பும் வைபவத்தையும் அவர் ரத்துச் செய்துள்ளார்

பதிவுகள் ரத்து செய்ய நடவடிக்கை

(வேலணை)

வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி. வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் ஒழுங்கான முறையில் அறிக்கைகள், செயற்பாடுகள் என்பனவற்றை பிரதேச சபைகளின் உப-அலுவலகங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலான சனசமூக நிலையங்களினது சமாசத்திற்கு சமர்ப்பிக்காமல் இருக்கும் சகல சனசமூக நிலையங்களினது பதிவுகள் யாவும் ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் ஏமாற்றம்

தபால்களைக் கப்பலில் சேர்ப்பதற்காக நேற்று பிரதம தபாலகத்திற்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இவர்களுக்குதபால்களுடன் கப்பல் நேற்று முன்தினம் மாலையே கொழும்பு நோக்கிப் புறப்பட்டு விட்டதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

திருத்தம்

நேற்று வெளிவந்த சீ-நோர் தொடர்பான செய்தியில் 'பிரதி முகாமையாளர் தெரிவித்தார்' என்பதனைப் பொது முகாமையாளர் தெரிவித்தார் எனவும், சென்ற ஆண்டு ஆகஸ்ட் வரை சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்றும் திருத்திக் கொள்ளவும்.

இந்திய

டிக்கப் போவதாகவும் அவை எச்சரித்து இருந்தன.

இவற்றைத் தொடர்ந்து நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் உரமானியத்தை முப்பது வீதமாக குறைக்க இருப்பதாக நேற்று அறிவித்துள்ளார்.

நேற்று

யில் காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பிற்பகலில் இருந்து அப்பகுதியில் சண்டை ஓய்ந்திருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாரண

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பாலம்பொதுப்பணி மன்றத்தில் கூடுமாறு நிர்வாகச் செயலாளர் திரு. தேவரஞ்சன் அழைப்பு விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.